Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 21 உ வெள்ளிக்கிழமை (05-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 212

# கொழும்பில் தங்குபவர்கள் 18க்கு முன் பதிய வேண்டும்

## தவறினால் கடும் நடவடிக்கையாம்

கொழும்பு, ஜூலை 5

கொழும்பு உட்பட மேற்கு மாகாணத்தில், அகதி முகாம் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கும் சகலரும் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர், தங்களைப் பற்றிய விவரங்களைப் பொலிஸில் பதியவேண்டும்.

இந்த இரண்டு வார காலத்திற்குள் அவ்வாறு பதிவு செய்யாதவர்கள் மீதும், அவர்களுக்கு தங்க இடவசதி அளித்தவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் எச்சரித்திருக்கிறது.

மேற்கு மாகாணத்தில் தற்காலிகமாக வசிக்கும் அனைவரினதும் அடையாளங்களை உறுதி செய்யும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக, பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு மகாணத்தில் அகதி முகாம்களில் வசிக்காத, நண்பர்கள் மற்றும் உறவினர்களுடனும் வேறு இடங்களிலும் தற்காலிகமாக வசிக்கும் அனைவரும் தங்கள் பெயர்கள் மற்றும் விவரங்களை அடுத்த பதினான்கு நாட்களுக்கு இடையில் அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும்—,

அப்படிப் பதிவு செய்யத் தவறுபவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்—

வெளியாருக்கு குத்தகை அல்லது வாடகைக்கு கட்டடங்கள் மற்றும் வீடுகளை கொடுத்துள்ள உரிமையாளர்கள் அவை பற்றிய விவரங்களை அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் அடுத்த 14 தினங்களுக்குள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப. சென்னையிலும், கொழும்பிலும் உப்பிடி மாறி மாறிப் பதியச் சொல்லுவினம் போலை.........

## இந்தியா ஏவுகணை பரிசோதனை

தரையில் இருந்து எழும்பி விமானங்களைத் தாக்கி அழிக்கும் இந்தியாவின் 'பிரித்வி' ஏவுகணை நான்காவது தடவையாக நேற்று வெற்றிகரமாகப் பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த ஏவுகணை 25. 2. 1988 இல் முதல் தடவையாக வெற்றிகரமாகப் பரிசோதனை செய்யப்பட்டது.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஆனையிறவு இராணுவத்தினருடன் கடந்த திங்கட்கிழமை நடந்த மோதலில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த வீரவேங்கை பிரசாத் (வாலிப்போடி மகேந்திரன் — சித்தாண்டி, மட்டக்களப்பு) நேற்று வீரமரணமடைந்தார். (ஒ)

## கருணாநிதி கண்டனம்

சென்னை, ஜூலை 5

பண்ருட்டி இராமச்சந்திரன் தாக்கப்பட்டது ஜனநாயக விரோதச் செயல் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கண்டித்தார். (ஒ-எ)

## தமிழக சட்டசபையில் முதல்நாளே குழப்பம்!

### பண்ருட்டி தாக்கப்பட்டார்!!

சென்னை, ஜூலை 5

தமிழ்நாடு புதிய சட்டசபை நேற்று முதல் நாளாகக் கூடிய போதே, ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் உரை நிகழ்த்துவதற்கு முன்னதாகச் சபையில் குழப்பம் ஏற்பட்டது.

எதிர்க்கட்சி எம். எல். ஏ. ஒருவர் தாக்கப்பட்டார். அதனைக் கண்டித்து மற்றும் நான்கு எம்.எல்.ஏக்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ. திரு. பண்ருட்டி இராமச்சந்திரன், ஆங்கிலத்தில் அறிக்கை ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார்.

அப்போது சுயேச்சை உறுப்பினரான தாமரைக்கனி, பண்ருட்டி இராமச்சந்திரனைத் தாக்கியதாகக் கூறி, பண்ருட்டி இராமச்சந்திரன் உட்பட இந்தியக் கம்யூனிஸ்ட்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புக் குண்டுவெடிப்பு சூத்திரதாரி தற்கொலை?

## மலையக தொழிற்சங்கவாதியும் கைது

கொழும்பு, ஜூலை 5

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மீதான கார்க் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்பட்ட 32 வயதான நடராசா வரதன் என்றழைக்கப்படும் ஸ்ரீதரன் என்ற நபர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்சப்பட்டது.

தலவாக்கலை தேயிலைத் தோட்டம் ஒன்றில் உள்ள வீடு ஒன்றில் ஒளித்திருந்த வரதனைப் பிடிக்க பொலீஸார் முயற்சித்தபோது அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் அவரது சடலம் நேற்று கொழும்பு நகர பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது என்றும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 5

பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்று முற்பகல் 10 மணியளவில் சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு குப்பிளான் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (ஒ-15)

## தாக்குதலுக்கு முதல்வரே பொறுப்பேற்க வேண்டும்

### செய்தியாளரிடம் பண்ருட்டி

சட்டசபையில் நடந்த தாக்குதல் சம்பவத்துக்கு முதலமைச்சர் ஜெயலலிதாவே பொறுப்பேற்க வேண்டும். – என்று திரு பண்ருட்டி இராமச்சந்திரன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சட்டசபையில் தாக்கப்பட்ட பண்ருட்டி இராமச்சந்திரன், சம்பவத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

ஆளுநர் பதவி தேவையில்லை என்பதை வலியுறுத்தியே அறிக்கை படித்தேன்—ஆளுநர் மற்றும் முதலமைச்சர் முன்னிலேயிலேயே நான் தாக்கப்பட்டேன். இது கண்டிக்கத்தக்கது.

இச்சம்பவத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவே பொறுப்பேற்க வேண்டும்—என்றார்.

முன்னாள் அமைச்சர் திரு நாவுக்கரசு ''தமிழக சட்டசபையில் ஆளுநர் முன்னிலையில் இப்படி ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினரால் தாக்கப்பட்டது இல்லை. இது கண்டனத்திற்குரியது — என்றார். (ஒ-எ)

## இரு மாணவர் உட்பட மூவர் பழுகாமத்தில் படுகொலை

யாழ்ப்பாணம், ஜூலை 5

மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பழுகாமத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் உட்பட மூவரைப் படுகொலை செய்தனர்.

கடந்த முதலாம் திகதி பழுகாமம் கிராமத்தை சுற்றிவளைத்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரும். ரெலோவினரும் அப்பகுதியில் 200 பேரை கைது செய்ததாகவும்—

பின்னர் அவர்களில் ஐந்து இளைஞர்களைத் தம்முடன் முகாமுக்குக்கொண்டு சென்று சித்திரவதை செய்து அவர்களில் மூவரைக் கொலை செய்தனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

உயர்தர வகுப்பு மாணவர்களான முருகேசுப்பிள்ளை நவநீதன் [வயது 19], வல்லிபுரம் லோகேஸ்வரன் [வயது 19] ஆகியோரும், சீனித்தம்பி வெள்ளைத்துரை [வயது 18] என்பவருமே படுகொலை செய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5]

## வலி. வடக்கைச் சேர்ந்த 22 பேர் யாழ் வந்தனர்; கண்ணீர் மல்க வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

வலி. வடக்கில் இராணுவத்தினரிடம் சிக்குண்டிருந்தவர்களில் நோய்வாய்ப்பட்டிருந்த 22 பேர் நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு செஞ்சிலுவைச் சங்க சாவதேசக் குழுவினரால் அழைத்து வரப்பட்டனர்.

அங்கிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் றக்கா வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தில் வைத்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அழைத்துவரப்பட்டவர்களிடமிருந்து தமது உறவினர்கள் பற்றிய தகவல்களை கேட்டறிவதற்காக ஏராளமானோர் நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகம் முன்பாகக் கூடியிருந்தனர்.

நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்த தமது உறவினர்களை கண்டதும் அங்கிருந்து வந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாடு கொழும்பில்

மாலே, ஜூலை 5

சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் அடுத்த உச்சி மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதிவரை கொழும்பில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

மாலேயில் நடந்த இரண்டு நாள் வெளியுறவு அமைச்சர் நிலை மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

அம்மாநாடு நேற்று முடிவடைந்தது. [அ-எ]

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 11 ஆவது பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

கைலாசபதி கலையரங்கில் இரண்டு அமர்வுகளாக நடைபெறும் பட்டமளிப்புக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமை வகித்துப் பட்டங்களை வழங்குவார்.

664 பல்கலைக்கழக மாணவர்கள் இம்முறை பட்டம் பெறுகிறார்கள். கலாநிதிப் பட்டம், முதுமெய்யியல் மாணி, முதுகலைமாணி, முது விஞ்ஞான மாணி, பட்டப்பின் கல்வி டிப்புளோமா போன்ற உயர் பட்டங்களும், கலைமாணி, நிர்வாகமாணி,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மடு அகதிகளில் சிலரை இடம் மாற்ற முயற்சி

மடு முகாமில் உள்ள அகதிகளில் ஒரு பகுதியினரை வேறு இடங்களில் குடியமர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முகாமில் தங்கியுள்ள 26 ஆயிரம் அகதிகளுக்கும் போதிய வசதிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும்—

அதனால் இங்குள்ளவர்களில் ஒருபகுதியினரை முருங்கன், ஆள்காட்டிவெளி, கோவில்குளம் பகுதிகளில் முகா[illegible] வைக்க [illegible] அதிபர் முயற்சி மேற்கொண்டுள்ளார் என்றும் அறியவருகிறது. (ஒ-3)

## ஈழப் போராளிகள் குறித்து பவார் சென்னையில் பேச்சு

சென்னை, ஜூலை 5

நேற்றுக் காலை சென்னைக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் ஈழப்போராளிகள் விவகாரம் குறித்தும் பேச்சுக்கள் நடத்தினார்.

மாநிலஆளுநர் பீஷ்ம நாரா[illegible]த்து தமிழ[illegible] கடலோரப் பகுதிகளைப் [illegible]வது குறித்து திரு. பவார் பேச்சுக்கள் நடத்தினார்.

கடலோரக் கண்காணிப்புப் பணியில் கடற்படை, கடலோரக் காவற்படை, போலீஸ் படை ஆகியனவற்றை முழு அளவில் பயன்படுத்துவது பற்றியும் பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது.

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழ் நாட்டிற்குள் அத்துமீறி நுழைவதைத் தடுக்க எடுக்க வேண்டிய பல் வேறு நடவடிக்கைகள் குறித்தும் திரு. பவார் ஆளுநருடன் பேசினார்.

இப் பேச்சுக்களைத் தொடர்ந்து, தமிழகக் கடலோரப் பகுதிகளில் கடற்படை, கடலோரக் காவற்படை ஆகியவற்றின் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு தேவை

யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சமீபமாக [ஒரு மைலுக்குள்] டாக்டர் குடும்பத்திற்கு வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 328, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17380]

### மணமகள் தேவை

யாழ். இந்து 35 வயது நிரம்பிய U.K. இல் P.H.D. என்ஜினியர் படித்த மணமகனுக்கு நட்சத்திரம் பூசம், பாவம் குறைந்த சாதகர் மணப்பெண் தேவை. தொடர்பு ABCDE. 328, நாவலர் றோட். (17398)

### மணப்பெண்கள் தேவை

இங்கு வேலை செய்யும் இந்து குற்றமுள்ள 30 வயது B. Sc. பொறியியலாளருக்கும், 35 வயது டாக்டருக்கும், 30 வயது குற்றமுள்ள கனடா பொறியியலாளருக்கும் மணப்பெண்கள் தேவை. ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17393)

### மணப்பெண் தேவை

U. K. இல் இருக்கும் இந்து 32 வயது குற்றமுள்ள எக்கவுண்டனுக்கும், 31 வயது B. Sc. பொறியியலாளருக்கும், ஜேர்மனி, 30 வயது கத்தோலிக்க I. C. M. A. க்கும், இந்து குற்றமுள்ள 25 வயது டென்மார்க் ஆசிரியருக்கும் மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17392)

### மணமக்கள் தேவை

யாழ். இந்து 30 வயது சனடாவில் எக்கவுண்டன் மணமகனுக்கும் சகோதரி வயது 32, மிருகவைத்தியருக்கும் மாற்று விவாகம் செய்வதற்கு மணமக்கள் தேவை. மணமகன் நட்சத்திரம் பூசம், மணமகள் நட்சத்திரம் சித்திரை. கன்னிராசி, குற்றமற்ற சாதகம். தொடர்பு ABCDE 328, நாவலர் றோட். (17397)

### ரைப்ரைட்டர் சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) வாங்கவும், விற்கவும் மற்றும் சிறந்த முறையில் திருத்தவும் தொடர்பு கொள்ளவும்: பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/0194]

### ஜெனரேட்டர்

3000 Wக்கும், 4500 W க்கும் இடைப்பட்ட நல்ல செயற்திறனுடைய ஜெனரேட்டா உடன் தேவை. மண்ணெண்ணெய்யால் இயங்குவதற்கு முன்னுரிமை. க. நிர்மலானந்தன், 52/2, சண்டி வீதி, சுண்டிக்குளி. [ஆஸ்பத்திரி வீதியும், சண்டி வீதியும் சந்திக்கும் இடம்] (17396)

### விவாகப் பொருத்தம்

மனப் பொருத்தம், மணப் பொருத்தம் பார்க்க நாட வேண்டிய சிறந்த இடம்: சோதிட நிலையம், மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17391)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை காலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4170)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கரும்புலி கப்டன் மில்லர்

[வல்லிபுரம் வசந்தன]

வீர மலர்வு: 1 - 1 - 1966

வீர உதிர்வு: 5 - 7 - 1987

களப்பலி எனப்படும் முதற் கரும்புலி யிவன் உளப்பசி இனத்துயர் சுதந்திரம் எனும்பசி களிப்பொடு போயினன் மில்லராம் வசந்தனே அழித்தனன் மாடியும் அழிந்தனர் கயவரே.

துன்னாலை. நண்பர்கள்

---

## விண்ணுலக வாழ்வில் ஓராண்டு பூர்த்தி



### க. ஜெயராமச்சந்திரன்

(மொழிபெயர்ப்பாளர்)

தூலமுகிழ்ப்பு: 15 - 12 - 1947

தூலஅவிழ்ப்பு: 15 - 06 - 1990

திதி: 05 - 07 - 1991

மண்ணுலகில் ஒன்றெனவே வாழ்ந்திட்டீர் வையம் போற்ற
விண்ணுலகில் ஆங்கது போல் வாழ விரைந்திட்டீர்
கலங்கித் தவித்து ஏங்கி நிற்கின்றோம் யாம்
ஆறுமோ இத்துயரம் பூவுலகில்.

தீராத் துயரத்திலிருக்கும்;
குடும்பத்தினர்,
உற்றார், நண்பர்கள்.

கற்குழி வடக்கு,
சாவகச்சேரி.

(16919)

---

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### D. சேனாதிராஜா குரூஸ்

[M. H. D. I. கும்பகோணம் L. Co இலங்கை பல் கட்டுபவர், கண் பரிசோதித்துக் கண்ணாடி கொடுப்பவர்]

மலர்வு: 13-06-1937

மறைவு: 05-07-1982

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அன்புடன் ஆதரித்த எம் தெய்வமே! எம்மை சடுதியாய் ஆறாத்துயரில் ஆழ்த்தி ஒன்பது ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு எங்களை என்றும் விட்டு அகலாது.


உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்,
மனைவி, மக்கள், மருமகன்,
மற்றும் உறவினர்கள.

இல. 146,
பருத்தித்துறை வீதி, (அரசடிச்சந்தி)
யாழ்ப்பாணம்.

[17405]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 10 — 03 — 1964

வீரமரணம்: 05 — 07 — 1987

### மேஜர் கமல் (அச்சன்)

(து. வ. பரமேஸ்வரராஜா)


05-07-1987 அன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த மேஜர் கமலுக்கு எமது வீர அஞ்சலிகள.

மயிலியதனை வாழ் மக்கள்,
வல்வெட்டித்துறை.

[17395]

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வடிவேலு ஸ்ரீமோகன்

[மோகன் பிறதர்ஸ் உரிமையாளர்]

அன்னை மடியில்: 16 – 09 – 1958

ஆண்டவன் அடியில்: 05 – 07 – 1984

ஆண்டுகள் ஏழு சென்றாலும் நிலைத்திருப்பாய் எங்கள் நினைவில்.

பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, மாமா, அம்மம்மா,
தம்பிமார், தங்கைமார்.

210, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

(17404)

---

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை.

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1990 / 1991

இப்பல்கலைக்கழகத்தில் 1990 / 1991 ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு:

மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமுகமளிக்கவும்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்.
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்.
4. போட்டோ பிரதிகள் 8 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை.

**சட்டணங்கள்:**

1. கலைப் பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60 -செலுத்தும்படி வேண்டப்படுகின்றார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப் பீட மாணவர்களும், விஞ்ஞான, விவசாய, மருத்துவ பீட மாணவர்களும் பதிவுக்கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம்:
   மருத்துவம் ரூபா 20/-
   விஞ்ஞானம் ரூபா 30/-

**பயிற்சி நெறி:** கலை
**பதிவு செய்யும் திகதி:** 29 - 07 - 1991
**நேரம்:** காலை 9- 00 — 4- 00

**பயிற்சி நெறி:** வர்த்தகம்/ முகாமைத்துவம்
**பதிவு செய்யும் திகதி:** 30 - 07 - 1991
**நேரம்:** காலை 9- 00 — 4- 00

**பயிற்சி நெறி:** விஞ்ஞானம்
**பதிவு செய்யும் திகதி:** 31 - 07 - 1991
**நேரம்:** காலை 9- 00 — 4- 00

**பயிற்சி நெறி:** மருத்துவம் / விவசாயம்
**பதிவு செய்யும் திகதி:** 01 - 08 - 1991
**நேரம்:** காலை 9- 00 — 4- 00

மேற்கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

—பதிவாளர்.

(சி-0218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அடித்துத் துரத்துவது பாவம் விளைக்கும்

தமிழகத்தில் அகதிமுகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளில், இதுவரை ஐயாயிரத்துக்கும் குறைவானோரே பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

அவ்வாறு பெயர் பதியாதவர்களை தமிழக அரசு என்ன செய்யும்? ஏது செய்ய முடியும்? நினைத்தால் அகதிகளை கப்பல் கப்பல்களாக ஈழத் தமிழ் மண்ணுக்குத் திருப்பி அனுப்புவார்கள். இல்லையேல் கொழும்பு அரசாங்கத்திடம் ஒப்படைப்பார்கள்.

ஈழ அகதிகள் அனைவரையும், இந்தியாவிலேயே இன்னொரு மாநிலத்துக்கு இடம் மாற்றும் ஒரு யோசனையும் தமிழக அரசுக்கு இருப்பதாக சென்னைத் தகவல்கள் கூறுகின்றன.

எதுவானாலும் அகதிகள் சம்பந்தமாக மத்திய அரசாங்கமே முடிவு செய்யும்.

இதற்கிடையில், அகதிகளில் வசதியுள்ள சிலர் தாமாகவே ஈழத் தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனர். அவ்வாறானோருக்கு தமிழக அரசும் ஸ்ரீலங்கா அரசும் மிக "அக்கறையுடன்" எல்லா உதவிகளையும் துரிதமாகச் செய்து கொடுக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஈழத் தமிழ் அகதிகளை சொந்த நாட்டுக்குத் வருவிப்பதில் ஸ்ரீலங்கா அரசுக்கு அதீத அக்கறை இருக்கும் என்பது சாதாரண விடயம். ஈழ அகதிகள் தனக்குப் பெரும் பாரம் என்று கூறிக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு நியாயந் தீர்வு காணுமாறு இந்தியா நெருக்குதல் கொடுப்பதற்கு இடம் தரலாகாது என்பது ஸ்ரீலங்காவின் நிலைப்பாடு. ஆகையால் அகதிகள் தாமாகவே திரும்பி வருவதற்கு அது தூண்டுதல் அளிப்பதில் வியப்பில்லை.

ஆனால் ஈழத் தமிழ் அகதிகள் சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு இந்தியா ஊக்கமளித்தலோ, உந்துதலோ, நிர்ப்பந்திப்பதோ உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளப் பட முடியாத ஒன்று.

ஈழத் தமிழ் பிரதேசங்களில் இன்னும் யுத்த நிலை தொடருகிறது. தமிழர்களின் உயிர்ப் பாதுகாப்புக்கு உத்தாவாதம் இல்லை. அகதி முகாம்களில் தங்கியிருப்போர் கூட படையினரால் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப் பட்டுக் கொலை செய்யப்படுகிறார்கள்.

இத்தகைய ஒரு பாதுகாப்பற்ற நிலையில் வெளிப்படையாக நிர்ப்பந்தம் செய்தோ அல்லது மறைமுகமாகத் தொல்லை கொடுத்தோ அகதிகளைத் திருப்பி அனுப்புவது அல்லது திரும்பிப் போகச் செய்வது முற்றிலும் மனித நேயமற்ற ஈனச் செயல்,

ராஜீவ் காந்தி கொலை விசாரணை மூலம் இன்னும் உண்மையான கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதற்கான ஆரம்பத் தடயங்களைத் தானும் கண்டு பிடிக்கவில்லை. ஆறு, ஏழு புலன் விசாரணைப் பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் நம்பக் கூடியதான புனைகதைகளை கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றன.

மொத்தத்தில் உண்மையான கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியாமற் போகலாம். அல்லது கண்டு பிடிக்க இன்னும் பல மாதங்கள் செல்லலாம். அதற்கு முன்பதாக, தஞ்சம் கேட்டுப் போன மக்களை, தடிகொண்டு அடித்துத் துரத்துவது பெரும் பாவம்

அந்தப் பாவத்தை இந்தியத் தலைவர்களோ, அல்லது தமிழகத் தற்காலத் தலைவர்களோ இப்போது விதைத்தால், கொடுமையான விளைவை என்றோ ஒரு நாள் அறுவடை செய்தே ஆவர்.

# பதற்றம், பயத்துடனேயே காலத்தைக் கழிக்கின்றனர்

## இராணுவத்திடம் சிக்குண்டு திரும்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வலி. வடக்கில் இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகளில் சிக்கியுள்ளவர்கள் தினமும் பதற்றத்துடனும் பயத்துடனுமே வாழ்கிறார்கள். திடீர் திடீர் எனக் கேட்கும் துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் சத்தமும் அவர்களைக் கலக்கமடையச் செய்கின்றன.

இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுபட்டு நேற்று யாழ். வந்து சேர்ந்த ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

காங்கேசன்துறை மயிலிட்டி, தையிட்டிப் பகுதிகளில் 75 க்கும் மேற்பட்டவர்கள் இன்னமும் சிக்குண்டு இருக்கிறார்கள். அவர்களில் அதிகமானோர் வயோதிபர்கள்.

இராணுவம் முன்னேறிய ஆரம்ப நாட்களில் மக்களிடமிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள், நகைகள் போன்றவற்றை படையினர் சூறையாடி விட்டனர் என்றும் —

அங்கு எஞ்சியிருப்பவர்கள் எப்போது தாமும் விடுதலையாகி தமது உறவினர்களிடம் சென்றடைவோம் என்ற ஏக்கத்துடனேயே காலத்தை கழித்து வருகின்றனர் என்றும் — அவர் தெரிவித்தார். [ஓ-5]

### கலை விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்ப நிறுவன மாணவ மன்றத்தின் கலை விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி முதல் பிற்பகல் 3-30 மணி வரை ஏபெல்ஸ் மண்டபத்தில் நடைபெறும். (த)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான கூட்டம் ஒன்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணியளவில் நடைபெறும். (இ)

### கதிர்காம உற்சவம்

கொழும்பு, ஜூலை 5

கதிர்காமம் வருடாந்தஉற்சவம் இம்மாதம் 10ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும். (இ-எ]

## எய்ட்ஸ் நோய்:

## கனடாவிலிருந்து வந்த தமிழ் இளைஞர் மரணம்

கொழும்பு, ஜூலை 5

கனடாவில் இருந்து திரும்பிய தமிழ் இளைஞர் ஒருவர் எய்ட்ஸ் நோய் காரணமாக கடந்த சனிக்கிழமை கொழும்பில் மரணமானார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவருடன் சேர்த்து எய்ட்ஸ் நோய் காரணமாக உயிரிழந்த இலங்கையரின் எண்ணிக்கை 9 என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் 600க்கு அதிகமானோர் எய்ட்ஸ் கிருமி காவிகளாக உள்ளனர். இவர்களில் 32 பேர் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டனர். இவர்களில் 23 பேர் இலங்கையர்கள் என்றும் ஏனையோர் வெளிநாட்டுப் பிரசைகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எய்ட்ஸ் நோய் கண்ட வெளிநாட்டவர் அனைவரும் இலங்கையிலிருந்து தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிச்சென்றுவிட்டனர் (இ-எ)

### யாழ். பல்கலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகமாணி, மருத்துவமாணி, சத்திர சிகிச்சைமாணி, விஞ்ஞானமாணி, சித்த மருத்துவமாணி — பட்டங்களும், இசைக் கலைமணி, நாட்டியக் கலைமணி விருதுகளும் வழங்கப்படவிருக்கின்றன

#### சித்த மருத்துவமாணி

இவ்வாண்டு முதல் முறையாக சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணிப் பட்டம் நால்வருக்கு வழங்கப்படுகிறது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் இங்கு மட்டுமே இந்தப் பட்டம் வழங்கப்படுகிறது.

விஞ்ஞான, மருத்துவ, கலைப பீடங்களில் தமது திறமைகளை வெளிக்காட்டிய 21 பேருக்கு பொற்பதக்கங்கள், புலமைப் பரிசில்கள், நினைவுப் பரிசில்கள் ஆகியன வழங்கப்படுகின்றன.

தமிழ்த் துறையில் காரை. சுந்தரம்பிள்ளைக்கும், தமிழ், வைத்தியத் துறைகளில் செல்வி வசந்தி அரசரத்தினத்துக்கும் கலாநிதிப் பட்டங்களும் வழங்கப்படுகின்றன.

பட்டமளிப்பு விழாவையொட்டி ஞாயிற்றுக்கிழமை கலை நிகழ்ச்சிகளும், திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நினைவுப் பேருரைகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. [அ-3]

## மாவீரர் தினத்தை ஒட்டி கலை, கலாசாரப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 5

மாவீரர் தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கலை, கலாசாரப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப்போட்டிகளில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

இப்போட்டிகள் கட்டுரை, நாவல், சிறுகதை, கவிதை, சுவரொட்டி ஆகிய விடயங்களில் நடைபெற உள்ளன.

பங்குபற்ற விரும்புபவர்கள் தமது ஆக்கங்களை 25-10-1991 க்கு முன்பு விடுதலைப் புலிகளின் பிரதேச மாவட்ட காரியாலயங்களில் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

போட்டிகள் அனைத்தும் மாணவருக்கு வேறாகவும் மற்றவர்களுக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

(முழு விவரமும் பின்னர் வெளிவரும்)

## ஷெவர்நாட்சே ராஜினாமா!

சோவியத யூனியனின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்நாட்சே கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்து விட்டதாக ரஷ்ய டெலிவிஷன் நேற்று அறிவித்தது.

தனது பதவி விலகல் கடிதத்தை அவர் கட்சியின் மத்திய கமிட்டிக்கு அனுப்பி வைத்தார்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு போட்டியாக புதிய ஜனநாயகக் கட்சி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்த ஒன்பது பிரமுகர்களில் திரு. ஷெவர்நாட்சேயும் ஒருவர் என்பது தெரிந்ததே.

# தட,கள போட்டிகள் நிகழ்ச்சி விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தியாகி திலீபன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான தட, கள விளையாட்டுப் போட்டிகளில் நடத்தப்படவுள்ள நிகழ்ச்சிகளின் விவரங்கள்:

### வட்டலவை மட்டத்தில்

#### ஆண்களுக்கானவை

100 மீற், 200 மீற், 400 மீற், 800 மீற், 1500 மீற், 10,000 மீற்றர் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல், வேக நடை.

#### பெண்களுக்கானவை

100 மீற், 200 மீற், 400 மீற், 800 மீற், 1500 மீற், 3000 மீற், 10,000 மீற், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், தத்தி மிதித்து பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல், வேக நடை.

### மாவட்ட மட்டத்தில்

#### இருபாலாருக்குமானவை

4x100 மீற் அஞ்சலோட்டம், 4x400 மீற் அஞ்சலோட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம்.

வட்டலவை மட்டப் போட்டிகளில் வேகநடை தவிர்ந்த 3 போட்டிகளில் ஒருவர் பங்குபற்றலாம்.

வட்டலவை மட்டப்போட்டிகளிலும் மாவட்டத்துக்கு மட்டுமான போட்டிகளிலும் ஒருவர் பங்குபற்ற விரும்பினால் தனித்தனியே விண்ணப்பங்களை நிரப்ப வேண்டும். (த)

### கொழும்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வானொலி அறிவித்தது.

இரத்மலானையில் வசித்து வந்த, வரதனின் சிநேகிதி ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே தலவாக்கலையில் வரதன் ஒளித்திருந்த வீட்டை பொலீஸார் சுற்றி வளைத்தனர். அங்கு வரதனுக்கு புகலிடம் கொடுத்ததாகக் கூறப்படும் மாஸ்டர் என்றழைக்கப்படும் நபரையும் மற்றும்சிலரையும் பொலீஸார் கைது செய்தனர் என்றும் இலங்கை வானொலி நேற்று அறிவித்தது,

கைதான மாஸ்டர் எனப்படுபவர் தொழிற்சங்கத்தலைவரான சந்திரசேகரம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர், [ஓ-எ]

## சுன்னாகம் இளைஞர் மீது வழக்காம்

கொழும்பு ஜூலை 5

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சுன்னாகம் இளைஞர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-எ]

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தொண்டா ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நாளைக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி கிடைத்தவர்கள் தத்தமது அனுமதிக் கடிதத்துடன் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-5)

## 120 பேர் பலி

பீகிங், ஜூலை 5

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாகப்பெய்த பெருமழை காரணமாக 120 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்றும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது, (அ-எ)

## மடுத் திருவிழா

மன்னார், ஜூலை 5

பிரசித்திபெற்ற மடு தேவாலய வருடாந்த உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்ற இந்த உற்சவத்தை மன்னார் ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்திரநாயகம் நடத்தி வைத்தார்.

சைக்கிள்களிலும், வண்டில்களிலும் ஏராளமான பக்தர்கள் தேவாலயத்துக்கு வந்திருந்தனர்.

மன்னார் அரச அதிபர் திரு. கணேஷ் உற்சவ ஏற்பாடுகளை கவனித்தார். (அ-3)

### தமிழக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி, மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அண்ணா புரட்சித் தலைவர் முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் எம். எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அச்சம்பவத்தைக் கண்டித்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்—

"இரு தரப்பிலும் தவறு உண்டு. இது தொடர்பாக சபாநாயகர் இன்று (வெள்ளி) தீர்ப்பளிப்பார்" — என்றும் தெரிவித்தார். (ஓ-எ)

### 22பேர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும், அவர்களை அழைத்துச் செல்ல வந்தவர்களும் கண்ணீர் மல்க கட்டித் தழுவிய காட்சி நெஞ்சை நெகிழ வைத்தது.

அழைத்து வரப்பட்டவர்களில் இரு இளைஞர்கள், இரு சிறார்களைத் தவிர ஏனையோர் வயோதிபர்களாவர். [அ-ஓ-5]

### கொழும்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்க வேண்டும்—

தெரிவிக்கத் தவறும் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் —

குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்படும் அப்படிப்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் அவசர காலச் சட்டத்தின் கீழ் பறிமுதல்செய்யப்படும்— என்றும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## விசுவலிங்கம் கைலைநாதன்

[யாழ், பல்கலைக்கழக பௌதீகபீட பட்டதாரி, கிளிவெட்டி மகாவித்தியாலய ஆசிரியர்]

சங்குவேலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த விசுவலிங்கம் கைலைநாதன் 24-6-1991 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம், பகவதியின் அன்பு மகனும், ஸ்ரீராமச்சந்திரன் [ஜேர்மனி], பகிரதி, சிவதாசன் [நோர்வே], சத்தியபாமா [ஜேர்மனி], பிருந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நளினகுமாரி [ஜேர்மனி] செல்வநாயகம் [விஸ்கம் கூல்ஸ் ஸ்பொட் மானிப்பாய்], சந்திரகுமார் [ஜேர்மனி] ஆகியோரின் மைத்துனரும், நிருபினியின் சித்தப்பாவும், திலக்ஷி, திலக்ஷன், சாரங்கன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்,

சங்குவேலி,
மானிப்பாய்.

[17400]

## திருமதி சியாமளா சிவகுமார்

திருமதி சியாமளா சிவகுமார் காலமானார். இவர் பொ. சிவகுமாரின் அன்பு மனைவியும், நரேஷ்நிக்சனின் அன்புத் தாயாரும், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற இளைப்பாறிய மராமத்துப் பகுதி ஊழியர் பரிமளசிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி பரிமளசிங்கம் ஆகியோரின் அன்பு மகளும், கர்லஞ்சென்ற ஆ பொன்னையர், திருமதி மாணிக்கம் பொன்னையா ஆகியோரின் அன்பு மருமகளும், செல்வராசா (நோர்வே), பிறேமி (கொழும்பு), அற்புதராசா (இந்தியன் ஒவசீஸ் வங்கி, கொழும்பு), நிர்மலரூபன் (நோர்வே) ஆகியோரின் சகோதரியும், லலித், அனா, அரியரத்தினம், பாஸ்கரன், உதயகுமார், காலஞ்சென்ற காந்தரூபன், இந்திரர்ணி, செல்வராணி, அன்னராணி, யோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை (இன்று) வெள்ளிக்கிழமை 5 - 7 - 91 காலை 10-00 மணிக்கு 48, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லூர் பரி. யாக்கோர்பு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
செ. பரிமளசிங்கம்.
(தகப்பனார்)

(17406)

## திருமதி சின்னம்மா அம்பலவாணர்

[இளைப்பாறிய ஆசிரியை]

ஏழாலை தெற்கைச் சேர்ந்த திருமதி சின்னம்மா அம்பலவாணர் [04-07-91] நேற்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திரு. கதிரிப்பிள்ளை அப்பலவாணர் [இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், திருமதி. வி. கோமளவல்லி, திரு. பரமநாதன் [தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை யாழ்ப்பாணம்], திரு. சத்தியநாதன் (U. K), திரு. நேமிநாதன், சுதர்சனா [யாழ், பல்கலைககழக விஞ்ஞானபீடம் மூன்றாம் வருடம்], உமாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. தி. விநாயகமூர்த்தி [யாழ். மாநகரசபை], திருமதி ப. வத்சலா, திருமதி ச. றஞ்சினி [U. K] ஆகியோரின் அன்பு மாமியாரும், சலசா, சலோஜனன், சுஜீவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [5-07-91] இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

சாம் வீதி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
க. அம்பலவாணர்

[17149]

## திரு. இராசையா தங்கராசா

முன்னாள் அலுமினிய தொழிற்சாலை மனேஜர்
(ஓட்டுமடம்)

கொக்குவிலைச் சேர்ந்த திரு. இரர்சையா தங்கராசர் 4 7-91 இல் காலமானார்.

அன்னார் காலம்சென்ற பொன்னம்பலம் இராசையா, திருமதி கனகம்மா இராசையா ஆகியோரின் மூத்த புதல்வனும், திருமதி கமலாதேவி (சங்கீத ஆசிரியை, நாரந்தனை கணேச வித்தியாலயம், ஊர்காவற்றுறை) யின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (கனடா), கஜேந்தினி (கனடா), சுதேந்தினி (கனடா), விஜேந்தினி, விஜேந்திரன், ராஜேந்தினி, சுதேந்திரன், குபேந்தினி, குபேந்திரன், பிரபேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராமச்சந்திரன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி நாகராணி, பேரின்பராஜா, புஸ்பராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செகராஜசிங்கம், திருமதி உமாதேவி செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும், விசுவலிங்கம், வேலுப்பிள்ளை ஆகியோரின் மருமகனுமாவர்ர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5-7-91) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

192, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

[17148]

# ஈழத் தமிழர் பிரச்சினை தீர இந்திய உதவி அவசியமல்ல

## லண்டன் கூட்டத்தில் பேச்சு

லண்டன், ஜூலை 5

ஈழத் தமிழர் பிரச்சினை தீருவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்பது அத்தனை அவசியமானதுமல்ல. தவிர்க்க முடியாததும் அல்ல.

இவ்வாறு லண்டனில் அனைத்துத் தமிழ் மன்றம் நடத்திய கூட்டம் ஒன்றில் அண்மையில் பேசிய திரு அர்ஜுனா சிற்றம்பலம் தெரிவித்தார்.

திரு. அர்ஜுனா விடுதலைப் புலிகள் ஆதரவாளராவார். சமீபத்தில் இந்தியா சென்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசியுமுள்ளார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

ஈழத் தமிழர் விடுதலை பெற்று தனித் தேசிய இனமாக தலையெடுத்து விட்டனர்.

ஈழத் தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் அளவிற்கு வளர்ந்துவிட்டனர். அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியும். எவர் தயவும் தேவையில்லை.

ஆயினும் இந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் ஈழத்தமிழரோடு சம்பந்தப்பட்டுள்ளது. எனவே ஈழத்தமிழர் பிரச்சினை தீர இந்தியா உதவ வேண்டும். ஆனால் அது அத்தனை அவசியமானது அல்ல தவிர்க்கமுடியாததும் அல்ல.

ராஜீவ் கொலையால் ஏற்பட்ட சோகம் நீங்கிய பின்னர் ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும்.— என்றார்.

(அ-எ)

## கப்டன் மில்லர் நினைவு நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கரும்புலி கப்டன் மில்லரின் (வசந்தன் — துன்னாலை) 4 ஆவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம் மீது முதன் முறையாகக் கரும்புலித் தாக்குதல் நடத்தி அதை நிர்மூலமாக்கிச் சாதனை படைத்தவர் மில்லர். [ஒ-5-15]

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 5

விடுதலைப் புலிகளின் துணைப் படையில் பயிற்சி பெற்றவர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி பெற்ற அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (ஒ-5)

★ ★

யாழ்ப்பாணம். ஜூலை 5

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வலிகாமம் பிரிவு தொடர்பாளர்கள், கிராமியத் தொடர்பாளர்கள், உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில். 4.30 மணிக்கு நடைபெற இருக்கிறது.

(ஒ)

## வார இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

டொனால்ட் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியின் இரு கால் இறுதியாட்டங்கள் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

நாளைய ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க அணியும்—

நாளை மறுதினம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணியும்மோதும்.

(உ)


★ விலங்கியல் ★
R. ஈஸ்வரதாசன்
B. Sc. [Cey]
92 A/L புதிய பகுதி
ஆரம்பம்:Sat. 7-30 a.m
91 A/L
மாதிரி வினாத் தாள்
ஆரம்பம்:
Sat. 11-00 a.m
Personal
New Science
Centre,
Jaffna.
[சி-0198]


# ஜெயலலிதாவின் கருத்தே மத்திய அரசின் நிலைப்பாடு

## இணை அமைச்சர் சொல்கிறார்

திருவனந்தபுரம், ஜூலை 5

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் தமிழ் நாட்டின் புதிய மாநில அரசாங்கம், மத்திய அரசின் கருத்தையே கொண்டிருக்கிறது.

இது விடயத்தில் செல்வி ஜெயலலிதாவின் அணுகுமுறைக்கும் மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கும் இடையில் முரண்பாடு எதுவும் இல்லை.

இவ்வாறு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கொச்சியில் செய்தியாளரிடம் பேசுகையில், இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் விடுதலைப் புலிகளை அடையாளம் காணவும், அவர்களை இலங்கைக்கு நாடு கடத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்—என்றும் திரு. ஜேக்கப் மேலும் தெரிவித்தார்.

[அ-எ]

# ஜே. வி. பியினர் - புலிகள் இணைந்துசெயற்பட முயற்சி

## மஜீத் எம். பி. கூறுகிறார் இப்படி!

கொழும்பு, ஜூலை 5

பொலன்னறுவைப் பகுதியில் ஜே. வி. பியினர் மீண்டும் தலைகாட்டத் தொடங்கியுள்ளனர்.

ஜே. வி. பியினரும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளும் அங்கு நடைபெறுவதாகத் தெரிகிறது. பாதுகாப்புப் படையினர் இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

ஜனாப். எஸ். ஏ. அப்துல் மஜீத் அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டில் இயங்கும் புலிகளையும் மற்றும் அகதிகளையும் திருப்பியனுப்பப் போவதாக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். இது வரவேற்கக் கூடியதாகும் என்று அவர் மேலும் கூறினார். (ஒ-5)

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் (கலோ)

(Asst. Supdt. of Surveyor)

சித்தன்கேணியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் (நில அளவைத் திணைக்கள உதவி அத்தியட்சகர், ஹற்றன்) ஹற்றனில் காலமானார். இவர் பேரின்பநாயகியின் அன்புக் கணவரும், ரதிவதனி (ஆசிரியை, சென் தோமஸ் கல்லூரி, பண்டாரவளை), அகிலன் (சென் அந்தனீஸ், கொழும்பு), மஞ்சுளா (ஆசிரியை, பராசக்தி வித்தியாலயம, அல்லைப்பிட்டி), மைதிலி (ஆசிரியை, விவேகானந்த மகா வித்தியாலயம், கொழும்பு - 13), சுமங்கலி (நில அளவையாளர், இரத்தினபுரி), அரவிந்தை (கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய மாணவி) ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி அருணாசலம் சிவாம்பிகை அவர்களின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (03-07-1991) புதன் கிழமை ஹற்றனில் நடைபெற்றன. தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''அருணோதயம்''
டச்றோட்,
சித்தன்கேணி.

தகவல்:
திருமதி
அருணாசலம் சிவாம்பிகை

(17146)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 5 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org